

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் கலைஞர் திடலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெறும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மின்னொளி கபாடி போட்டியினை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான, கனிமொழி கருணாநிதி எம்.பி. தொடங்கி வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில நெசவாளர் அணி துணை அமைப்பாளர் வசந்தம் ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்ன மாரிமுத்து, ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, அன்புராஜன், காசி விஸ்வநாதன், நவநீதகண்ணன், விளாத்திகுளம் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





தூத்துக்குடி மாவட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை மூலம் ஏரல் அரசு சமுதாய நல மையத்தில் நடைபெற்ற விழாவில் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 12 புதிய சுகாதார கட்டிடங்களை திறந்து வைக்கும் விதமாக அதற்கான கல்வெட்டினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி நேற்று (05.03.2025) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி.செ.அமிர்தராஜ், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மேயர் பெ.ஜெகன் ஆகியோர் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்ட தி,மு,க, இளைஞரணி சார்பில் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி கடலாடி பேருந்து நிலையம் முன்பு அமைந்துள்ள அண்ணா திடலில் இந்தித் திணிப்பு, நிதிபகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, தலைமையிலும் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத்ராஜா வரவேற்புரையாற்றினார், இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தலைமைக் கழகப் பேச்சாளர் கம்பம் செல்வேந்திரன் மற்றும் முகமது அஸ்வத் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர். ஏ.என்.இன்பா ராகு, பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர், முதல்வர் பிறந்த நாள் விழா! மதுரை வடக்கு மாவட்டம்

# மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி சார்பாக ஜல்லிக்கட்டு விழா

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மார்ச் 9 அன்று நடைபெறுகிறது!

மதுரை, மார்ச் 7-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க., மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி சார்பாக வரும் ஒன்பதாம் தேதி அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் மாபெரும் ஜல்லிக்கட்டு போட்டி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. அதன் விபரம் :-

திராவிட மாடல் ஆட்சி நாயகர், இந்தியாவே போற்றும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த தினத்தை முன்னிட்டு மார்ச் 1ஆம் தேதி முதல் தொடர்ச்சியாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன

அதன் ஒரு பகுதியாக

மதுரை வடக்கு மாவட்டம், மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பாக வருகிற 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரையில் அமைந்திருக்கும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் பிரம்மாண்ட அரங்கில் தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விளையாட்டு விழா மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் காலை 7 மணிக்கு துவங்க உள்ளது

சிறப்பு மிக்க இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் மதுரை வடக்கு மாவட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., அவை தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆசைக்கண்ணன், மூவேந்திரன், பொம்மதேவன், மாவட்டப் பொருளாளர் எம்.சோமசுந்தர பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.தனச்செல்வம், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, கழக விவசாய அணி மாநில துணை செயலாளர் ஆர்.கணேசன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் வீர கணேசன், மதுரை மேற்கு தொகுதி பொறுப்பாளர் டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர்.கே.ஜெயராமன், ஆர். அன்பழகன், காவேரி, சுதன், தவமணி, மதி வெங்கடேஷ், கே. எஸ்.ராஜாமணி, மண்டல தலைவர்கள் பாண்டி செல்வி பாண்டியன், புவனேஸ்வரி சரவணன், சுவிதா விமல் மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், பரவை பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றிய கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், கிளைக் கழகத்தினர், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர், பொதுமக்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள்

ஜல்லிக்கட்டை மக்கள் கட்டணமில்லாமல் மகிழ்ச்சியுடன் அமர்ந்து பார்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மதுரையிலிருந்து ஜல்லிக்கட்டு அரங்கத்திற்கு சிறப்பு பேருந்து வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விழாவில் பங்கேற்கும் ஜல்லிக்கட்டு காளைகளுக்கும் அதனை தழுவி வெற்றி பெறும் மாடுபிடி வீரர்களுக்கும் சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி மேற்கு ஒன்றியம் பார்த்திபனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு பார்த்திபனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பரமக்குடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாணவ – மாணவியருக்கு கல்வி உபகரணங்களை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய துணைச் செயலாளர், நகர் கழகச் செயலாளர், கழக நிர்வாகிகள் தலைமை ஆசிரியர், ஆசிரியர் பெருமக்கள், மாணவ செல்வங்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தாலுகா நாட்டரசன் கோட்டை பேரூர்க் கழகத்தின் சார்பில் தமிழக முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டுபேரூர்க் கழகத்தின் சார்பில் கண்ணனுடைய நாயகி அம்மன் கோவிலில் அன்னதானத்தை ஒன்றிய துணை செயலாளர் கோதண்டபாணி ஏற்பாட்டின் பேரில் பேரூர்க் கழக செயலாளர் எஸ்.ஜெயராமன் வழங்கினார். இதில் மகளிரணி எஸ்தர் மேரி, ஆர்.வி.எஸ்.அரங்கநாதன், அக்கினிச்சாமி, ஜான் பீட்டர், அழகப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இந்தித் திணிப்பு – தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக

# இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ராஜகண்ணப்பன் – நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

இராமநாதபுரம், மார்ச் 7-

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் அரண்மனை முன்பு இந்தி திணிப்பு நிதிபகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா வரவேற்புரையாற்றினார்.மாநில இளைஞரணி துணைச்செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, நகர் கழக செயலாளர்கள் ஆர்.கே.கார்மேகம்,கே.டி.பிரவீன்தங்கம் முன்னிலை வகித்தனர்.

பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் கலந்து கொண்டு இந்தியாவில் பல்வேறு மாநிலங் களில் அந்தந்த மாநில மொழிகளில் பேசுகின்றனர். இந்த நாடு பன்முக தன்மை கொண்ட நாடு.

நாட்டில் 145 கோடி மக்கள் உள்ளது. தென் இந்தியாவில் பா.ஜ.க. வுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதால் தொகுதி மறு சீரமைப்பு மேற்கொண்டு வடமாநிலத்தை வைத்துக் கொண்டு ஆட்சி செய்திவிடலாம் என சங்கி கூட்டம் முயற்சி செய்வதை முதல்வர் தடுப்பார் என்றார்.

இதனை தொடர்ந்து, பேசிய தலைமைக் கழக பேச்சாளர் நாஞ்சில் சம்பத்,

இந்தியாவில் ரூ 150 க் கூட வருவாய் இன்றி 70 கோடி மக்கள் வாழ்த்து வருகின்றனர். ஆனால், 45 லட்சம் கோடி கார்ப்பிரேட்டுகளுக்கு வரிச் சலுகையாக அறிவித்த அரசு தான் டெல்லியில் இருந்து வருகிறது.

தமிழகத்தில் நிர்வாகத்தை முன்னெடுத்து செல்ல முடியாத அளவிற்கு ஒன்றிய அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. தமிழகத்தில் மாணவர்கள்,ஆசிரியர்கள் என 45 லட்சம் பேருக்கு பாதிக்கும் வகையில் கல்வி நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்தி உள்ளது. மும்மொழியை ஏற்றால் தான் நிதி தருவோம் என ஒன்றிய அமைச்சர் தலைக்கனம் ஆக பேசி வருகிறார்.

இலங்கை அதிபர் இந்திய வந்த அன்றைய தினத்திலே தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். இந்த செயலுக்கு பிரதமர் வெட்க பட வேண்டும்.

இலங்கை கடற்படை தொடர்ந்து மீனவர்கள் கைது, படகுகளில் பறிமுதல் செய்கிறது. இதனை கண்டித்து போராட்டம் நடத்தும் மீனவர்கள் ஒன்றி அரசு கண்டுகொள்ளவில்லை யென்றால் எங்களுக்கான பிரதமர் இல்லையா. ஆனால் தமிழ்நாடு முதல்வர் இலங்கையில் உள்ள படகுகளுக்கு 6 லட்சம் வழங்கியதை 8 லட்சமாக உயர்வு. சிறையில் உள்ள மீனவர்களுக்கு நாள் ஒன்றுக்கு வழங்கிடும் நிதி ரூ 350 லிருந்த 500 ஆக உயர்வு, நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரை நேரில் சந்தித்து தமிழக மீனவர்களுக்கான பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கான முதல்வர் உத்தர விட்டுள்ளார். மக்களுக்கான அரசாக முதல்வர் திகழ்ந்து வருகிறர் ஒன்றிய அரசு எந்தவித நெருக்கடி கொடுத்தாலும் அதை பற்றி கவலை கொள்ளாமல் மக்கள் பணியை முதல்வர் தொடர்ந்து செய்து வருவார் என பேசினார்.

இந்த கூட்டத்தில், முன்னாள் எம்.பி.,பவானி ராஜேந்திரன், மாநில நிர்வாகி குணசேகரன், துணை அமைப்பாளர்கள் ரமேஸ்கண்ணா, குமரகுரு,சண் சம்பத்குமார், ஆர். சந்தியேந்திரன்,ஆர்.கே.கோபிநாத், எஸ்.தவ்பீக் ரகுமான் மற்றும் மாநில,மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகாசி அரசு மருத்துவமனையில் மார்ச் 1 ல் பிறந்த குழந்தைகளுக்கு 1 வது பகுதி கழக செயலாளர் அ.செல்வம் ஏற்பாட்டில் சிவகாசி மாநகர தி.மு.க.வின் சார்பில் மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தங்க மோதிரம் வழங்கினார். உடன் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வனராசா, ஒன்றிய கழக செயலாளர் விவேகன்ராஜ், பகுதி கழக செயலாளர்கள் காளிதாசன், கருணாநிதி, பாண்டியன், அப்துல் முத்தலிப், மாரீஸ்வரன், திருத்தங்கல் பொன் சக்திவேல், மாவட்ட துணை செயலாளர் இராமமூர்த்தி, மாநகர பொருளாளர் வெள்ளத்துறைப்பாண்டி, மாவட்ட பிரதிநிதி இராஜேஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மிசா கோ. இளங்கோவன்

### மார்ச் 7 (2015)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக 'துறவி' எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.

1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால "மிசா" கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**